Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No. 145/2023

| | |
|---|---|
| | Prosecution PW 1 |
| Deposition of Witness for | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | வினோத் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 24.04.2024

**1 ம் எதிரி ஆஜர். 2 ம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் செட்டிபாளையத்தில் குடியிருந்து சம்பவ சமயத்தில் வீட்டில் இருந்து வந்தேன். புகார்தாரர் நாராயணன் எனது தாத்தா அவர் தற்போது இறந்துவிட்டார். கடந்த 27.08.2020 ம் தேதி மதியம் சுமார் 03.10 மணியளவில் எனது தாத்தா நாராயணன் எனக்கு போன்

S/d K. Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

மூலம் ஆஜர் எதிரி சர்மிளா எனது தாத்தாவின் போக்கிய தோப்பில் மட்டைகளை எரிப்பதாகவும், அதை எனது தாத்தா கேட்டதற்கு அவரை அசிங்கமாக திட்டி கையால் இடது கன்னத்தில் அடித்ததாகவும், தான் கீழே விழுந்துவிட்டதாகவும், சர்மிளா அவரது மகள் தீக்சிகசாவும் ரீப்பர் கட்டையால் தொடை முதுகில் அடித்ததாகவும், கொலை மிரட்டல் விடுத்ததாகவும், ரீப்பர் கட்டையை போட்டுவிட்டு சென்றதாகவும், சொன்ன தகவலைக் கேள்விப்பட்டு அடிபட்ட எனது தாத்தாவை கரூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**
**இல்லை.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

S/d K. Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No. 145/2023

| | |
|---|---|
| | Prosecution PW 2 |
| Deposition of Witness for | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | விக்னேஷ் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 24.04.2024

**1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் மேலப்பாளையத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது. என்னுடன் பாண்டியன் என்பவர் கையெழுத்து செய்தார். என்னிடம்

S/d K. Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது. அதிலும் என்னுடன் பாண்டியன் என்பவர் கையெழுத்து செய்தார். கடந்த 28.08.2020 ம் மதியம் 03.00 மணியளவில் பசுபதிபாளையம் போலிசார் தகராறு நடந்த இடத்தை பார்வையிட்டு படம் வரைந்தனர். அங்கு கிடந்த ரீப்பர் கட்டை ஒன்றை எடுத்தனர். அதை போலிசார் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினார்கள். என்னிடம் காட்டப்படும் ரீப்பர் கட்டைதான் போலிசார் கைப்பற்றியது. பார்வை மகசர், கைப்பற்றுதல் மகசர் முறையே அ.சா.ஆ.1,2 ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**
**இல்லை.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

S/d K. Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.